FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348037 89/DC/TVLR/2025

1. District மாவட்டம் : Thiruvallur PS காவல்நிலையம் : VRDC., Year ஆண்டு : 2025 FIR No முதஅ எண் : Date நாள் : 15.07.2025

2. (i) Act சட்டம்: BNSS., and the Sections பிரிவுகள்: 10.30 hrs.
(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: Sec 10b BNSS.,
(iii) Act சட்டம்: Act 1988, as amended in 2018 Sections பிரிவுகள்: Sec. 7, 12 r/w 7 of PC Act 1988 as amended in 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 14.07.2025 19.30 hrs Date to நாள் வரை : 15.07.2025 03.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.07.2025 Time நேரம் : 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15.07.2025 Time நேரம் : 10.00 hrs & 10.30 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் by typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS 65 km, North East.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Sub Registrar office, Gummidipoondi, Thiruvallur District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6 Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாள்/ தகவல் தந்தவர் பெயர் D. Murugandhan (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality நாட்டினம்
(e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue வழங்கப்பட்ட நாள்
Place of Issue வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் Spl. Tahsildar
(g) Address முகவரி Special Tahsildar, LD unit, Highway-I unit-III, Thiruvallur, DC District Deputy Inspection cell office, Thiruvallur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) S. Suresh, Sub Registrar, Sub Register office, Gummidipoondi (2) G. Prabhakaran, S/o Chinnaswamy, No. 83, 3rd Street, Krishnanagar, old pallavaram, Ch. 43. (3) Pakirgaraj S/o Raja, No. 686, Pathirivedu Village, Madhavaram, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் NIL

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Un accounted and unclaimed amount Rs. 1,35,900/- was Seized during the joint Surprise check at SRO, office, Gummidipoondi records.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிக்குறிப்பறிக்கை :- இன்று 15.07.2025 அன்று காலை 10.00 மணியளவில் தலைமை காவலர் S. மாலா அவர்கள் நான் மேலும் மாற்றப்பட்டு இருந்தபோது, திரு. V. திருமுருகன், தலைமை காவலர் மற்றும் பெண் காவலர் பிரிவு, திருவள்ளூர் மாவட்ட ஆயுதப்படை (பொறுப்பு), திருவள்ளூர் மாவட்ட தனிப்படை காவலர் (பொறுப்பு), திருவள்ளூர் மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்ட சைபர் கிரைம் காவலர் (பொறுப்பு), திருவள்ளூர் மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்ட புலனாய்வு

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

அனுப்புநர் R.முருகநாதன், துணைவட்டாட்சியர் (நில எடுப்பு), நெடுஞ்சாலை I அலகு III, திருவள்ளூர். திருவள்ளூர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) திருவள்ளூர் பெறுநர் திரு.V.கணேசன், காவல் துணை கண்காணிப்பாளர், இராணிப்பேட்டை (பொறுப்பு) திருவள்ளூர் ந.க.எண்.274/2025/I-2,நாள்14.07.2025..அய்யா. பொருள்- திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - கும்முடிப்பூண்டி- சார்பதிவாளர் அலுவலகம் 14.07.2025-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது தொடர்பான நடவடிக்கை எடுக்கக்கோரி கடிதம் அனுப்புதல் சம்பந்தமாக. பார்வை:- திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறைகள். நாள்- 14.07.2025 முதல் 15.07.2025 வரை. திருவள்ளூர் மாவட்டம். கும்முடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்வதற்காக பொது மக்களிடமிருந்து ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்கள் மூலம் கையூட்டாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக தொடர்ந்து மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், இருப்பு காஞ்சிபுரம் அவர்களுக்கும், திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில், கடந்த 14.07.2024-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான என் தலைமையில், திருவள்ளூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினர் மற்றும் அலுவலர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு 14.07.2025-ஆம் தேதி மாலை சுமார் 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 15.07.2025-ஆம் தேதி விடியற்காலை சுமார் 2.00 வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனையின்போது அலுவலகத்தில் கண்டறியப்பட்ட யாரும் உரிமைக்கோராத பணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட யாரும் உரிமைகோரா கணக்கில் வராதப்பணம் ரூ.12,100/-, பிரபாகரன் அவர்கள் பத்திரப்பதிவு செய்த நபர்கள் கொடுத்ததாக கணக்கில் வைத்திருந்த லஞ்ச பணம் ரூ.72,800/- மற்றும் ஆவண எழுத்தர் வெங்கடேசன் என்பவரிடம் வேலை செய்யும் திரு.பாக்கியராஜ் என்பவர் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்ததாக சந்தேகத்தின்பேரில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.11,000/- ஆகமொத்தம் ரூ.1,25,900/- சோதனையின்போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. எனவே, சார்பதிவாளர் அலுவலக பணியாளர்கள், தனிநபர் திருமதி.சுகந்தி, ஓட்டுநர் திரு.பிரபாகரன் மற்றும் திரு.பாக்கியராஜ் ஆகியோர்களை விசாரித்து பதிவு செய்து வாக்குமூலங்கள், அவர்கள் கைப்பட எழுதி

(FIR content continues to the next page....)

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

கொடுத்த விளக்க கடிதங்கள், பணம் கையாடல் மொழுங்கப்பட்ட CD களின்கள் 6 (4+2), திரு.பாக்கியராஜ் அவர்கள் செல்போன் மூலம் Data Enty Operator திரு.மொளஸ்வரன் அவர்களுக்கு G-Pay மூலமாக பணம் அனுப்பியதற்கான Screen Shot Print out மற்றும் அலுவலகத்தின் வருகைப்பதிவேட்டின் நகல், தனிநபர் பணம் கையிருப்புப்பதிவேட்டின் நகல் மற்றும் 14.07.2025-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரப்பதிவுகளின் விவரங்கள் அடங்கியதன் "A" account-ன் Print out ஆகியவற்றில் சார்பதிவாளர் திரு.கரேஷ், காவல் ஆய்வாளர் திருமதி.மாலா, காவல் துணை கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் மற்றும் என்னுடைய கையொப்பம் செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றையும், மேலும் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ரூ.1,25,900/- (500X249, 200X1, 100X12)-ஐ பொதுமக்களிடமிருந்து பெற்ற லஞ்சம் பணம் என முடிவு செய்து அது தொடர்பான நபர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள தங்களிடம் ஒப்படைக்கிறேன். கையொப்பம் திரு.R.முருகநாதன், தனிவட்டாட்சியர் (நில எடுப்பு) நெடுஞ்சாலை-I, அலகு-III, திருவள்ளூர்.திருவள்ளூர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), திருவள்ளூர் இணைப்பு -1) ரொக்கம் ரூ. 1,25,900/- (ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரம் ரூபாய்)2)செயல்முறை ஆணை அசல்.3) பணம் கைப்பற்றப்பட்ட நபர்கள் மற்றும் அலுவலர்களின் விளக்கக்கடிதங்கள் (7).4) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் (7) மற்றும் மேலே கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இதர ஆவணங்கள். மேலும் திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் மாவட்ட துணை ஆய்வக்குழு அலுவலரால் தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் விவரம் வருமாறு- மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருவள்ளூர், (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் இரு துறை திடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள், முன்னிலை:-திரு.R.முருகநாதன், ந.க.எண்.274/2025/I-2, நாள்:-14.07.2025 பொருள்:-திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - கும்முடிப்பூண்டி - சார்பதிவாளர் அலுவலகம் - 14.07.2025-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக- செயல்முறைகள் ஆணை:- திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்வதற்காக பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்கள் மூலம் கும்முடிப்பூண்டி சார்பதிவாளர் கையூட்டாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், இன்று 14.07.2025-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டுத்தணிக்கைகள் செய்ய மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) திரு.R.முருகநாதன், தனிவட்டாட்சியர் (நில எடுப்பு),

(FIR content continues to the next page....)

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

நெடுஞ்சாலை-I, அலகு-III, திருவள்ளூர் மற்றும் திருவள்ளூர் ஊரல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், திரு.V.கணேசன், காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு நாளாக திடீர் கட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று 14.07.2025-ந்தேதி மதியம் சுமார் 2.00 மணிக்கு திருவள்ளூர் ஊரல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு மாலை சுமார் 4.00 மணிக்கு கும்முடிப்பூண்டி சிப்காட் செல்லும் சர்வீஸ் சாலையில் சுமார் 100 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் வந்து வாகனங்கத்தை நிறுத்திவிட்டு இறங்கி நடந்து சென்று. ஆங்காங்கே குழுவினருடன் சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்துக்கொண்டிருந்தபோது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பொதுமக்கள் உள்ளே சென்று பத்திரப்பதிவு செய்வதற்கு, ஆவணப்பதிவாளர்கள் அலுவலகத்திற்கு உள்ளே சென்று வருவதாக பத்திரப்பதிவு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அலுவலகத்திற்கு வெளியே பொதுமக்கள் சார்பு வேதனமாக வேலை செய்வதால் பத்திரப்பதிவு தாமதமாக செய்யப்படுவதாக பேசிக்கொண்டார்கள். குழுவினருடன் மேற்படி அலுவலகத்தை கண்காணித்து அதன்பின்னர் மாலை சுமார் 7.30 மணியளவில் கும்முடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்குள்ளே குழுவினருடன் சென்றபோது. அலுவலகத்தின் பொதுமக்கள் சிலர் அமர்ந்துக்கொண்டிருந்தார்கள். பின்னர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் சார்பதிவாளர் மற்றும் அனைவரிடமும் என்னை அறிமுகம் செய்துக்கொண்டும். காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் திருவள்ளூர் விஜிலென்ஸ் பார்ட்டிகளையும் அறிமுகம் செய்து வைத்து, கடந்த கூட்டுத்தணிக்கை செய்ய வந்துள்ளதாக கூறி அனைவரையும் சோதனை செய்ய ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டு சோதனை செய்யப்பட்டது. பின்னர் கும்முடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரைப்பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் திரு.S.கருணாகரன் த/பெ.சிவபாலன் என்றும். கும்முடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 07.01.2025 ஆம்தேதி முதல் உதவியாளராகவும். கூடுதல் பொறுப்பாக சார்பதிவாளர் பணியையும் செய்து வருவதாக தெரிவித்தார். மேலும் தனது குடும்பத்துடன் எண்.122, காலேஜ் பிளாட், பாத் தெரு, மடிப்பாக்கம், சென்னை-91 என்ற முகவரியில் வசித்துவருவதாக கொடுத்தார். அவரிடம் என்னை அறிமுகம் செய்துக்கொண்டு, என்னுடன் வந்திருந்த காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்து அவர்களுடைய அலுவலக அறையை சுற்றிப்பார்த்து, சுய பரிசோதனை செய்து

(FIR content continues to the next page....)

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

காட்டியும், மேற்படி அலுவலகத்தை கூட்டுத் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தெரிவித்து ஒத்துழைப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. சார்பதிவாளர் அவர்களிடம் அலுவலக பணியாளர்கள் குறித்து விசாரணை செய்ய, திரு.மகாலிங்கேஸ்வரன், (Data Entry Operator), திருமதி.S.துர்கா, உதவியாளர், மற்றும் அலுவலகத்தில் சிசிடிவி என்ற தனியார் நிறுவனம் மூலம் பணிபுரியும் திருமதி.R.சுகந்தி, வயது-30, க/பெ.ராஜா (IP Camera Operator) மற்றும் அலுவலகத்தில் வேலை அதிகமாக இருப்பதால் அந்த வேலைகளை செய்வதற்காக என்னால் பணியமர்த்தப்பட்டுள்ள திருமதி.V.சுகந்தி, வயது-35, க/பெ.வினோத் (தனியார்) ஆகியோர்கள் பணிபுரிவதாகவும் தெரிவித்தது. அலுவலகத்தை சோதனை செய்ய ஆட்சேபணை ஏதுமில்லை என தெரிவித்தார். பின்னர் அலுவலகத்தில் பிரதான ஹாலில் போடப்பட்டிருந்த இருக்கையில் அமரவைக்கப்பட்டிருந்த பொதுமக்களை விசாரணை செய்தவிவரம் கீழ்க்கண்டவாறு:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.ராஜேஷ், வயது-34, த/பெ.ராமசந்திரய்யா, எண்.444, சூரவாரிகண்டிகை, சிறுபுழல்பேட்டை, கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்	ரூ.2,500/-	தனது சொந்தமான நிலத்தை வேறொருவருக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்டுவிட்டது என்றும், அது தொடர்பாக மனு கொடுப்பதற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும், செலவிற்காக ரூ.2,500/- வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். எனவே அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
2.	திரு.தினதயாளன், வயது-38, த/பெ.முனிரத்தினம், எண்.735,B. MH சாலை, மாநெல்லூர் கிராமம், திருவள்ளூர் மாவட்டம்	ரூ.8,000/-	தன்னுடைய நிலத்தை விற்பனை செய்வது தொடர்பாக சார்பதிவாளர் அலுவலகம் வந்திருந்ததாகவும், செலவிற்காக ரூ.8,000/- வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
3.	திருமதி.லதா, வயது-35, க/பெ.நாகராஜ், பண்ணூர் கிராமம், மாதர்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.15,000/-	தனது பெயரில் இவ்று பத்திரப்பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்காக அலுவலகம் வந்ததாகவும், மேலும் செலவிற்காக ரூ.15,000/- வைத்துள்ளதாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

(FIR content continues to the next page....)

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

4.	திரு.முத்துகுமார். வயது-32. த பெ.மாரி. மண்ணடி தெரு. குப்புளி கிராமம். ஏரூர். கும்முடிப்பூண்டி தாலுக்கா. திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.6,500/-	தனது பெயரில் பத்திரப்பதிவு செய்வதற்காக சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும். சொந்த செலவிற்காக ரூ.6,500/- வைத்திருந்தாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
5.	திரு.ராமராஜ். வயது-35. த பெ. லஷ்மையா. எண்.1138. தோட்டக்கார தெரு. மாதர்பாக்கம். கும்முடிப்பூண்டி தாலுக்கா. திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.1,300/-	எனது நண்பர் பத்திரபதிவு செய்வதற்கு சாட்சி கையெழுத்து போடுவதற்காக சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும். செலவிற்காக ரூ.1,300/- வைத்திருந்தாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
6.	திரு.வேணு. வயது.84. த பெ. கண்ணன். 225. அம்பேத்கர் தெரு. சின்ன ஓபுளாபுரம். கும்முடிப்பூண்டி தாலுக்கா. திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.12,000/-	தன்னுடைய நண்பர் கண்டபன் என்பவருடன் சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும். விவசாயத்திற்கு பூச்சி மருந்து இயந்திரம் வாங்குவதற்காக ரூ.12,000/- வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
7.	திரு.S.J.மோகன். வயது-49. த பெ. ஜெயகோபி. எண்.517. PH ரோடு. பாதிரிவேடு. திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.3,000/-	தன்னுடைய உறவினர் தீனதயாளன் மற்றும் ரேவதி ஆகியோருடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும். சொந்த செலவிற்காக பணம் ரூ.3,000/- வைத்திருந்தாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
8.	திரு.கோவிந்தசாமி. வயது-58. த பெ.நாகைய்யா. பண்ணூர் கிராமம். மாதர்பாக்கம். திருவள்ளூர் மாவட்டம்	ரூ.14,000/-	தன்னுடைய மருமகள் லதா அவர்களின் பத்திரப்பதிவிற்காக அவர்களுடன் அலுவலகத்திற்கு வந்ததாகவும். வீடு செலவிற்காக பணம் ரூ.14,000/- வைத்திருந்தாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

(FIR content continues to the next page....)

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

9.	திரு.முருகதாஸ். வயது-57, த/பெ. சுப்பிரமணி, எண்.90, லஷ்மியம்மன் கோவில் தெரு, கும்புளி கிராமம், ஏரூர் போஸ்ட், கும்முடிபூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.74,800/-	தன்னுடைய நிலத்தை முத்துகுமார் என்பவருக்கு விற்பனை செய்து அதன் தொடர்பாக பத்திரப்பதிவிற்காக வந்திருந்ததாகவும். தன்னுடைய நிலத்திற்காக மொத்த தொகையிலிருந்து முத்துகுமார் அவர்கள் இன்று கொடுத்த பணம் ரூ.74,800/- என்று தெரிவித்தார் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
10.	திரு.மணி, வயது-51, த/பெ. பட்டுகந்தரம், எண்.5, பெருமாள் கோவில் தெரு, சாணப்புத்தூர் கிராமம், கும்முடிபூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.1,89,000/-	உமாமகேஸ்வரி என்பவரிடமிருந்து நிலம் வாங்கியதாகவும். அதற்காக பத்திரபதிவு செய்ய சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும். நிலம் வாங்கியதற்காக அவரிடம் கொடுப்பதற்காக ரூ.1,89,000/- கொண்டுவந்துள்ளதாக தெரிவித்தார். எனவே அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
11.	திரு.பாக்கியராஜ், வயது-42, த/பெ.ரகு, எண்.686, பாதிரிவேடு கிராமம், மாதர்பாக்கம் போஸ்ட், கும்முடிபூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.11,000/-	தான் வெங்கடேசன் என்ற ஆவண எழுத்தரிடம் வேலை பார்த்து வருவதாகவும். சர்வே எண்.122/47, விஜயகுமாரி என்பவரின் பெயரிலுள்ள இடத்திற்கு அரசின் வழிகாட்டி மதிப்பீடு தொகை கேட்பதற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும். தன்னுடைய செலவிற்காக ரூ.11,000/- பணம் வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். அவரது செல்போனை வாங்கி சோதனை செய்தபோது, G-Pay மூலமாக Data Enty Operator திரு.மொளலீஸ்வரன் அவர்களுக்கு 15.02.2025 ஆம் தேதி ரூ.10,000/- மற்றும் 27.02.2025 ஆம்தேதி அன்று ரூ.1,000/- மும் அனுப்பியுள்ளது தெரியவந்தது. எனவே அவர் வைத்திருந்த பணமும், சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின்பெயரில் பணம் ரூ.11,000/-த்தை கைப்பற்றப்பட்டது. மேலும், பாக்கியராஜ் அவர்கள் செல்போன் மூலம் Data Enty Operator திரு.மொளலீஸ்வரன் அவர்களுக்கு G-Pay மூலமாக பணம் அனுப்பியதற்கான Screen Shot Print out எடுத்து ஆவணமாக இணைக்கப்பட்டுள்ளது.

(FIR content continues to the next page....)

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

மேற்படி 1 முதல் 11 வரை பொதுமக்கள் அனைவரும் தனிதனியாக நான் விசாரணை செய்து. அவர்கள் வாக்குமூலம் எழுதிக்கொடுத்தார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். வரிசை எண்.1 முதல் 10 வரையானவர்களின் பணத்தை விசாரணைக்கு பின்னர் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. வரிசை எண்.11-ல் குறிப்பிடப்பட்டுள்ள திரு.பாக்கியராஜ் என்பவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் அவர் வைத்திருந்தப் பணம் ரூ.11,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன்பின்னர் குழுவினருடன் சார்பதிவாளர் இருக்கைக்கு முன்புறம் இருந்த மேஜையை சோதனை செய்ய கணினி பொறுத்தப்பட்டிருந்தது. மேஜையின் மீது பத்திரப்பதிவுக்காக தாக்கல் செய்யப்பட்ட சில ஆவணங்கள் இருந்தன. மேற்படி ஆவணங்களை பதிவு செய்துக்கொண்டிருப்பதாக சார்பதிவாளர் திரு.சுரேஷ் அவர்கள் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்தபோது. அவருடைய பர்ஸில் ரூ.1,000/- பணம் இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது. காலை அலுவலகத்திற்கு வந்தபோது செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று தெரிவித்தார். மேலும். அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்வையிட்டபோது. அதில் ரூ.1,000/- குறிக்கப்பட்டிருந்தது. எனவே. அந்த பணம் மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார். சார்பதிவாளர் அவர்கள் இடதுபுறம் அமர்ந்திருந்த நபரைப்பற்றி விசாரிக்க அவர் பெயர் திரு.மொஸிஸ்வரன். வயது-33. த/பெ.ரதன் (Data Entry Operator) என்றும். இன்று பத்திரப்பதிவிற்காக அதிகமான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததால். சார்பதிவாளருக்கு உதவியாக பணிகளை செய்துகொண்டு இருந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது. அவரிடம் ரூ.340/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது. காலை அலுவலகத்திற்கு வந்தபோது ரூ.500/- செலவிற்காக கொண்டு வந்ததாகவும். மதியம் உணவு செலவுபோக மீதம் வைத்திருந்ததாக தெரிவித்தார். மேலும். அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்வையிட்டபோது. அதில் ரூ.500/- குறிக்கப்பட்டிருந்தது. எனவே. அந்த பணம் ரூ.340/- மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார். திரு.மொஸிஸ்வரன் என்பவருக்கு இடதுபுறம் இருந்தவரைப் பற்றி விசாரிக்க அவரது பெயர் திருமதி.S.துர்கா. வயது-35. க/பெ.முனியப்பன். உதவியாளர் என்றும். ஆவண பில் போடுதல். பில்லுக்கு சான்று அனுப்புதல் மற்றும் சார்பதிவாளர் அவர்களுக்கு உதவியாக பணிகள் செய்து வருவதாக தெரிவித்தார். அவரை பெண்

(FIR content continues to the next page....)

Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

காலையில் நேரடியாக சோதனை செய்தபோது, அவரிடம் ரூ.300/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, காலை அலுவலகத்திற்கு வந்தபோது ரூ.200/- செலவிற்காக கொண்டு வந்ததாகவும், பெட்ரோல் மற்றும் சாப்பாடு செலவு போக மீதம் வைத்திருந்ததாக தெரிவித்தார். மேலும், அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பதிவேட்டில் பார்வையிட்டபோது, அதில் ரூ.200/- குறிக்கப்பட்டிருந்தது. எனவே, அந்த பணம் ரூ.300/- மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது விளக்கத்தினை கையால் எழுதிக்கொடுத்தார். அதனை அடுத்து கணினி அறையில் இருந்த நபரைப்பற்றி விசாரிக்க தனது பெயர் திருமதி.R.சுகந்தி என்பவர் பத்திரப்பதிவு நகல் வழங்குவது தொடர்பான CD கட் செய்து கொடுப்பது எனது பணியாகும். அவரை பின் காலையில் மூலம் சோதனை செய்தபோது, அவரிடம் ரூ.300/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, காலை அலுவலகத்திற்கு வந்தபோது ரூ.300/- செலவிற்காக கொண்டு வந்ததாகவும், பெட்ரோல் போடுவதற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். மேலும், அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்வையிட்டபோது, அதில் ரூ.300/- குறிக்கப்பட்டிருந்தது. எனவே, அந்த பணம் ரூ.300/- மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது விளக்கத்தினை கையால் எழுதிக்கொடுத்தார். அந்த அறையினை குழுவினருடன் சோதனை செய்தபோது, அந்த அறையில் முதலில் இருந்த கணினி மேஜை மீது இருந்த 44-பனப்பாக்கம் கிராமத்தின் வழிக்காட்டி மதிப்பீடு பதிவேட்டின் இடையே பணம் 4 CD கவர்களிலும், பணமாகவும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த பணத்தினை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.4000/- இருந்தது. கவர் 1-ல் உட்புறம் sh-அம்பி-50 என்று எழுதப்பட்டு அதில் ரூ.1,000/- இருந்தது. கவர்-2-ல் உட்புறம் 5-3-2 1000 company என எழுதப்பட்டு பணம் ரூ.2,500/- இருந்தது. கவர்-3-ல் உட்புறம் துர்-5, sh-5 என குறிப்பிடப்பட்டு ரூ.1,100/- இருந்தது. கவர்-4-ல் BG. S/5/ M-2000 M5.M5 3/3000 என எழுதப்பட்டு அதில் பணம் ரூ.6,000/- இருந்தது. ஆகமொத்தம் அந்த பதிவேட்டில் உள்ளே ரூ.11,600/- இருக்கது. இது தொடர்பாக சார்பதிவாளரிடம் விசாரித்தபோது, கணினி அறையில்லை IT Camera Operator திருமதி.சுகந்தி அவர்களும், தன்னுடன் வேலைக்கு அமர்த்தப்பட்ட திருமதி.சுகந்தி (தனியார்) இருவரும் அந்த அறையில் வேலையில் போது பயன்படுத்துவார்கள் என கூறினார். மேற்படி இருவரிடம் அந்த பணம் குறித்து கேட்டபோது, தங்களுக்கு அந்த பணம் குறித்து எதுவும் தெரியாது என்று கூறினார்கள். எனவே அந்த பணம் யாது மர்மம் மற்றும் ஆவண எழுத்தர்களிடம் விசாரணை

(FIR content continues to the next page....)

Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என கருதி வழக்கு விசாரணைக்காக கைப்பற்றினேன். அந்த கணினி அறையின் கதவு எதிரிலுள்ள கணினிக்கு எதிரே சுவர் ஓரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனை செய்யப்பட்டபோது, ஆவணங்களுக்கு இடையே 500 நோட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.20,500/- இருந்தது. மேற்படி பணம் குறித்து சார்பதிவாளர் மற்றும் மேற்படி கணினி அறையில் இருந்த இரு நபர்களிடம் விசாரித்தபோது, அப்பணம் குறித்து எதுவும் எங்களுக்கு தெரியாது என்று தெரிவித்தார்கள். எனவே, அந்த பணம் பொது மக்கள் மற்றும் ஆவண எழுத்தர்களிடம் லஞ்சமாக பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என கருதி வழக்கு விசாரணைக்காக கைப்பற்றினேன். அதன் பின்னர் ஹாலில் அமைக்கப்பட்டுள்ள பத்திரபதிவிற்காக புகைப்படம் எடுப்பதற்காக போடப் பொறுத்தப்பட்டுள்ள கணினி அமைக்கப்பட்டுள்ள மேஜையை சோதனை செய்தபோது, அதில் ஆவணங்கள் மட்டும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பிரதான ஹாலின் வடக்கு பக்கத்தில் உள்ள சிறிய அறையில் பழைய பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பிரதான ஹாலிலிருந்து மாடிக்கு செல்லும் படிகட்டின் வழியே முதல் தளத்திற்கு செல்லும்போது மாடி படிகட்டுகள் அமைந்துள் இடத்தில் ஒரு பெண் அட்டை பெட்டிக்குள் பணத்தை மறைத்து வைப்பதை பார்த்துவிட்டு குழுவினருடன் அவரை விசாரணை செய்தபோது, தனது பெயர் திருமதி.சுகந்தி என்றும் இந்த அலுவலகத்தில் சார்பதிவாளர் சொல்லும் வேலைகளை செய்து கொடுப்பதாகவும், இன்று பத்திரப்பதிவிற்காக வந்த நபர்கள் கொடுத்த பணம் ரூ.1,200/- இருந்ததாகவும், அதனை போலீசாரை பார்த்ததும், அட்டை பெட்டிற்கு கீழே மறைத்து வைத்ததாகவும் கூறினார். அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் பணம் ரூ.1,200/- இருந்தது. எனவே, அப்பணத்தை விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். மேலும் அவரது விளக்கத்தினை கையால் எழுதிக்கொடுத்தார். மேலும் மாடிப்படியின் கீழே அடுக்கி வைக்கப்பட்டிருந்த பழைய பொருட்களின் ஒரு அட்டை பெட்டியின் கீழே ரூ.9,000/- இருந்தது. அது குறித்து சார்பதிவாளர் அவர்களிடம் விசாரித்தபோது, அந்த பணம் அந்த இடத்தில் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்று தெரிவித்தார். அலுவலகத்தின் முகப்பு பகுதியில் ஆவணங்களின் பதிவுரை மற்றும் அலுவலர்கள் உணவு அருந்தும் அறையும், அதற்கு அடுத்து கழிப்பறையும் அமைக்கப்பட்டிருந்தது. ஆவண பதிவுரையை சோதனை செய்தபோது, அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் எதுவும் இல்லை. மேலும் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த சார்பதிவாளரின் ஓட்டுநரை பற்றி விசாரிக்க அவரது பெயர் திரு.G.பிரபாகரன்,

(FIR content continues to the next page....)

Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

வயது-33, த/பெ. ஞானசேகரன் என்பவர் அலர் எண்.83, 3வது தெரு, கிருஷ்ணா நகர், பழைய பல்லாவரம், சென்னை-43 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், கும்முடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் பொறுப்பில் பணிபுரியும் திரு.சுரேஷ் அவர்கள் தன்னுடைய தங்கை பவித்ராவின் கணவர் என்றும், அவருக்கு டிரைவிங் தெரியாததால், தான்தான் அவருடைய (TATA Punch TN 22 EB 9022) காரை ஓட்டி அவரை வேலைக்கு தினமும் அலுவலகத்திற்கு அழைத்து வந்துவிட்டு மீண்டும் பணிமுடித்து அவரை வீட்டில் விடுவதாகவும், மேலும், சுரேஷ் அவர்கள் சொந்தமான வேலைகளையும் செய்து கொடுப்பதாகவும் தெரிவித்தார். மேற்படி காரை சோதனை செய்தபோது அதில் கைப்பற்றும்படி எந்த பொருளோ மற்றும் பணமோ எதுவும் இல்லை. மேலும், பிரபாகரனை சோதனை செய்தபோது அவருடைய பேன்ட் பாக்கெட்டில் பணம் வைக்கப்பட்டிருந்தது. மேலும், இரண்டு CD கவர்களிலும் பணம் வைக்கப்பட்டிருந்தது. அந்த பணத்தினை எடுத்து எண்ணிப்பார்க்க, மொத்தம் ரூ.69,000/- இருந்தது. CD கவர்களில் 1வது கவரில் உட்புறம் முனி-Suga-M-5 - 6/3 என்று எழுதப்பட்டிருந்தது. அதில் பணம் ரூ.2,300/- இருந்தது. 2 வது கவரில் அம்பி-15 என்று எழுதப்பட்டிருந்தது. அதில் பணம் ரூ.1,500/- இருந்தது. ஆக மொத்தம் அவரிடம் ரூ.72,800/- பணம் இருந்தது. இந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட பத்திர பதிவு தொடர்பாக வந்த நபர்கள் சார்பதிவாளரிடம் தெரிவித்துவிட்டு, சார்பதிவாளரிடம் கொடுத்துவிடுமாறு தெரிவித்து தன்னிடம் பணத்தை கொடுத்ததாகவும், அதனை பெற்று தன்னுடைய பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவரது விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார். அந்த பணம் குறித்து சார்பதிவாளர் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது, பிரபாகரன் தன்னுடைய மைத்துனர் என்றும், தான் அலுவலகம் வரும்போது தன்னுடைய காரை அவர் தான் ஓட்டி வருவார் என்றும், தன்னுடனே அலுவலகத்தில் இருப்பார் என்றும், பத்திரபதிவுக்கு வருபவர்கள், பத்திரபதிவு முடிந்ததும், அவர்கள் கொடுக்கும் பணத்தினை எனது மைத்துனரான பிரபாகரனிடம் வாங்கி வைத்துக்கொள்ளுமாறு கூறுவேன், அவரும் அவ்வாறே பணத்தை வாங்கி வைத்துக்கொண்டு நான் வீட்டிற்கு போகும்போது என்னிடம் கொடுப்பார், இன்றும் அதுபோல பத்திரப்பதிவு செய்தவர்கள் கொடுத்த பணத்தினை வாங்கி வைத்துக்கொள்ளுமாறு பிரபாகரனிடம் கூறினேன், அதன்படி அவர் பணத்தை வாங்கி வைத்திருந்தார் என்றும், அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை, மேலும் அவரது விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார், மேலும் திரு.சுரேஷ், உதவியாளர்

(FIR content continues to the next page....)

Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

(பொறுப்பு) சார்பதிவாளர், திருமதி.துர்கா, உதவியாளர், திருமதி.காந்தி, கணினி ராஜா (IP Camera Operator), திரு.மொனலீஸ்வரன், Data Entry Operator, திருமதி.காந்தி, க/பெ. வினோத், (தனிநபர்) பிரபாகரன்- சார்பதிவாளரின் ஓட்டுநர்/ உதவியாளர் மற்றும் திரு.பாக்கியராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும், விசாரணைக்காக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைப்பதிவேடு ஜூலை/2025 மாதம், தனிநபர் பணப்பதிவேடு/2025 மாதம் ஆகியவை கைப்பற்றப்பட்டது. 14.07.2025-ஆம்தேதி முற்பகல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பான விவரங்கள் உள்ள Account-A-யை Printout எடுத்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள CCTV கேமரா குறித்து விசாரித்தபோது, IP Camera Operator-ஆக பணிபுரியும் திருமதி.காந்தி அவர்களிடம் விசாரிக்க நன்றாக வேலை செய்வதாக தெரிவித்தார். இந்த சோதனையின்போது அலுவலகத்தில் கண்டறியப்பட்ட யாரும் உரிமைக்கோராத பணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட யாரும் உரிமைகோரா கணக்கில் வராதப்பணம் ரூ.42,100/-, பிரபாகரன் அவர்கள் பத்திரப்பதிவு செய்த நபர்கள் கொடுத்ததாக வாங்கி வைத்திருந்த லஞ்ச பணம் ரூ.72,800/- மற்றும் ஆவண எழுத்தர் வெங்கடேசன் என்பவரிடம் வேலை செய்யும் திரு.பாக்கியராஜ் என்பவர் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்ததாக சந்தேகத்தின்பேரில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.11,000/- ஆகமொத்தம் ரூ.1,25,900/- சோதனையின்போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்சம் வாங்குவதும், கொடுப்பதும் குற்றம் என்ற பதாகை வைக்கப்பட்டுள்ளது. இந்த திடீர் கூட்டாய்வின்போது எடுக்கப்பட்ட பொருட்கள் அங்கங்க இடத்திலேயே வைக்கப்பட்டுள்ளது. அலுவலகத்திற்குள், அலுவலகத்திலிருந்த கோப்புகள் மற்றும் பொருட்களுக்கும் எந்தவித சேதாரம் இன்றி சோதனை செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட திடீர் இருத்துறை கூட்டுத்தணிக்கையை ஒரு திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையாக, நான் சொல்ல சொல்ல காவலர் அலுவலகம், காவல் ஆய்வாளர் கொண்டுவந்த மடிக்கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு எல்லாம் சரிபார்க்கப்பட்டது. இந்த திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையானது, 14.07.2025-ஆம் தேதி மாலை சுமார் 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 15.07.2025-ஆம் தேதி வியாழக்கிழமை சுமார் 3.00 மணிக்கு முடிக்கப்பட்டது. கையொப்பம் 1) திரு.V.கலைசெல்வன், காவல் துணைக் கண்காணிப்பாளர், இராணிப்பேட்டை, (பொறுப்பு) திருவள்ளூர். 2) திருமதி. S.மாலா, காவல் ஆய்வாளர், ஊரல்

(FIR content continues to the next page....)

Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act - 1988 as amended in 2018 Continuous...)

தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருவள்ளூர். 3) திரு.S.ஹரிஹரன், வயது-35, த/பெ.சிகுபாலன், உதவியாளர் (பொறுப்பு) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம். 4) திருமதி.S.துர்கா, வயது-35, க/பெ.சுப்பிரமணி, உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம். 5) திரு.G.பிரபாகரன், வயது-33, த/பெ. ஞானசேகரன், எண்.83, 3வது தெரு, கிருஷ்ணா நகர், பழைய பல்லாவரம், சென்னை-43 6) திரு.பாக்கியராஜ், வயது-42, த/பெ.த, எண்.6/6, பாதிரிவேடு கிராமம், மாதர்பாக்கம் போஸ்ட், கும்முடிபூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் மற்றும் 7) திரு.R.முருகநாதன், தனிவட்டாட்சியர் (நில எடுப்பு), நெடுஞ்சாலை-1, அலகு-III, திருவள்ளூர், திருவள்ளூர் மற்றும் மாவட்ட தகவல் ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு), திருவள்ளூர்.

Honoured Sir,

I received the above Complaint, Proceedings and unaccounted cash Rs.1,25,900/- and copy of documents and Registered a case registered a case in Thiruvallur V&AC, Cr.No.09/AC/2025/TVL, U/s. 106 BNSS., r/w. 7,12 r/w 7 of The Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 15.07.2025 at about 10.30 hrs. The original FIR, Complaint along with the Joint Surprise Check Proceedings of District Deputy Inspection Cell Officer, Statements, Self explanations, attested copy of office records and seized un-accounted un-explained bribe amount Rs.1,25,900/- at Sub Registrar Office, Gummidipoondi during the Joint Surprise Check, are submitted before the Hon'ble Principle District & Session Judge, Thiruvallur and other copies are forwarded to superior officers concerned.

(S.MALA), 15/07/2025
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
Thiruvallur.